# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0315 /2015

ஆணை எண்: 130 /2016

நாள்: 27/07/2016

திரு.K.கோபாலகிருஷ்ணன்,
எண்.540/C, 13வது வார்டு, நேரு நகர்,
புது ஆயக்குடி, பழனி தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம். — மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி,
ஆயக்குடி, திண்டுக்கல் மாவட்டம். — எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடிப் பேரூராட்சியைச் சார்ந்த திரு. K.கோபாலகிருஷ்ணன், த/பெ.கருப்பணன், புது ஆயக்குடி , பழனி வட்டம், என்பாரின் 25.08.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0315/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீடு தொடர்பாக பெறப்பட்ட ஆவணங்கள் விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், புதுஆயக்குடிபேரூராட்சியைச் சேர்ந்த திரு. K.கோபாலகிருஷ்ணன், என்பாரின் 25.08.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் மனுதாரர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தான் ஆயக்குடி பேரூராட்சி துப்பரவு பணியாளராக 15.09.2009 அன்று பணியமர்த்தப்பட்டதாகவும், தன்னுடன் வயதில் இளையவர்களான கதிர்வேல், மகேஸ்வரன், ராஜகோபால் ஆகிய மூவரும் தன்னுடன் துப்பரவு பணியாளர்களாக சேர்ந்தனர் எனவும் தெரிவித்துள்ளார். தான் வயதில் மூத்தவனாக இருந்ததால் பணிமூப்பு பட்டியலில் மேற்படி நால்வரில் முதலிடத்தில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் வேறு இரு தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்த வேண்டி மேற்படி நால்வரில் இருவரை 11.12.2009-ம் தேதி பணியிலிருந்து வெளியேற்றினார்கள் எனவும் மேற்படி நீக்க உத்தரவில் அடுத்த வரும் காலிபணியிடத்தில் முன்னுரிமை அடிப்படையில் பணி வழங்குவதாக தெரிவித்தனர் என்றும் மேற்படி பணி நீக்கமானது முறையாக செய்யப்படவில்லை எனவும் புதிதாக இருவரை பணியமர்த்தப்பட வேண்டி இருவரை பணியில் இருந்து வெளியேற்ற பணி மூப்பில் கடைசியாக இருப்பவர்களையே வெளியேற்ற வேண்டும் என்ற விதியை ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் ஊழல் புரியும் நோக்கத்தில் திட்டமிட்டு செயல்படுத்தி பணி மூப்பில் முதலிடத்தில் இருந்த என்னை பணி நீக்கம் செய்துள்ளனர் என தெரிவித்துள்ளார். தான் பணி வழங்கக் கோரி விண்ணப்பித்ததன் பேரில் எனக்கு பணி வழங்கப்படவில்லை. தன்னுடைய பெயர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பரிந்துரை செய்து வந்தால் மட்டுமே பணி வழங்கப்படும் என தெரிவித்ததாக தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பரிந்துரை செய்யப்படாது என்ற விபரம் தனக்கு எனது மதுரை உயர்நீதிமன்ற கிளையில் தெரிவிக்கப்படவில்லை எனவும் மேற்படி தீர்ப்பில் அது குறித்த விபரம் இல்லை என்பதை ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் ஊழல் புரியும் நோக்குடன் மறைத்து எனக்கு திட்டமிட்டு பணி வழங்க மறுத்து வருகிறார் என்றும் 01.07.2010 பணி மூப்பு பட்டியல் பெறப்பட்டிருந்தால் தனது

ஊழல் புரியும் நோக்குடன் மறைத்து எனக்கு திட்டமிட்டு பணி வழங்க மறுத்து வருகிறார் என்றும் 01.07.2010 பணி மூப்பு பட்டியல் பெறப்பட்டிருந்தால் தனது பெயர் பரிந்துரைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் என்றும் எனவே தனக்கு பணி வழங்க மறுத்து ஆயக்குடி பேரூராட்சி உண்மைகளையும் தனக்கு இழைக்கப்பட்ட தவறுகளையும் மறுத்துள்ளார்கள் என்றும் எனவே தன்னுடைய பணி வெளியேற்றம் முதல் இன்று வரை தனக்கு பணி வழங்காமல் இருக்கும் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் புரிந்துள்ள தவறுகள் குறித்து முறையாக விசாரித்து நீதி வழங்கக் கோரி இந்த புகார் மனுவை சமர்ப்பித்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு தொடர்பாக ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:—

> திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சியில் காலியாக உள்ள ஒரு துப்பரவு பணியாளர் பணியிடம் நியமனம் செய்வது தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையின் வழக்கு எண். W.P.No.8018/2015 நாள்.13.05.2015—ல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குனரின் அவசர குறிப்பாணை கடித ந.க.எண்.1521/2015/பேரு2 நாள்.19.06.2015—ன் படியும் மனுதாரர் பணிநியமனம் செய்வது தொடர்பாக இதர வகுப்பினர் பிரிவில் தகுதிவாய்ந்த நபர்கள் பட்டியலை அனுப்பி வைக்க வேண்டி 25.06.2015 நாளிட்ட பேரூராட்சி அலுவலக கடிதத்தின் மூலம் கோரப்பட்டதில், திண்டுக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடித ந.க.எண்.எக்ஸ்.2/103/2015 நாள்.17.07.2015—ன் படி இதர வகுப்பினர்

பிரிவு (OC) ல் தகுதி வாய்ந்த நபர்கள் பட்டியலிருந்து மனுதாரர் திரு.க.கோபாலகிருஷ்ணன் என்பவர் பெயர் இடம் பெறவில்லை என்ற காரணத்தினால் மனுதாரருக்கு பணியினை அளிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

3. மேற்கூறிய முறையீடு புகார் மனு மற்றும் அப்புகார் மனு மீது பெறப்பட்ட செயல் அலுவலர் விளக்க அறிக்கை ஆகியவைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைக்குப் பின் செயல் அலுவலர் நேரில் விசாரிக்கப்பட்டார். 06.05.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாணையின் போது செயல் அலுவலர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

> “மனுதாரர் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் இது குறித்து W P 8018/2015 படி மனு தாக்கல் செய்தார். நீதிமன்றம் அவர் மனு குறித்து உரிய ஆணைகள் இட ஆணையிட்டது. துப்பரவு பணியாளர் திண்டுக்கல் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு பட்டியல் கோரினேன். திண்டுக்கல் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் கோரப்பட்டதில் மனுதாரர் பெயர் பரிந்துரைக்கப்பட வில்லை என்பதால் மனுதாரருக்கு வேலை வழங்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கதிர்வேல், மகேஸ்வரன், ராஜகோபால், கோபாலகிருஷ்ணன் துப்பரவு பணியாளர்களாக பணியில் இருந்தார்கள். மகேஸ்வரன், கோபாலகிருஷ்ணன் ஆகிய இருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அரசானை 242 நாள்10.12.2009 படி 1. சின்ராஜ் 2. ஜிவானந்தம் என்பவர்களுக்கு தற்காலிக பணியிடங்களிலிருந்து ஈர்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையில் பணி நியமனம் செய்ய வேண்டிய

அவசிய நிலையில் பணி முன்னுரிமை பட்டியலில் கடைசியாக மனுதாரரும் திரு. மகேஸ்வரன் என்பவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். மனுதாரர் 17.09.2009 அன்று பணியில் சேர்ந்தார். திரு.மகேஸ்வரன் மற்றும் இருவரும் மேலே குறிப்பிட்ட படி பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அதில் மகேஸ்வரன் நீதிமன்றம் சென்று இடைக்கால ஆணை பெற்றதால் அதனடிப்படையில் அவருக்கு வேலை வழங்கப்பட்டது. மனுதாரர் மிகவும் காலம் தாழ்த்தி நீதிமன்றம் சென்றதால் அவருடைய முறையீடு நீதிமன்றத்தில் பெறப்பட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் கோருமாறு ஆணையிட்டதால் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் கோரப்பட்டது பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டதன் பேரில் மனுதாரர் பெயர் இல்லாததால் அவருக்கு வேலை வழங்கவில்லை என தெரிவித்துக் கொள்கிறேன் ஏற்கனேவே அலுவகத்தில் 26.02.2013ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. இது பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டது. அவரால் இவ்வலுவலகத்தில் இருந்து பணியில் சேர்வதற்கு அனுப்பப்பட்ட ஒப்புதல் 22.05.2014 அன்று ஒப்புதல் அட்டையில் கையெழுத்திட்டார். அதற்கு பிறகு அவர் திருநங்கையாக மாறிவிட்டதால் திருநங்கை அமைப்பில் பழனி வட்டாரத்தில் தலைவராகிவிட்டார். எனவே அவர் பணியில் சேர ஆர்வம் காட்டவில்லை. பணியாளரை நீக்கியது திரு.சுப்பிரமணியம் என்ற செயல் அலுவலர். அவர் தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். திரு.மகேஸ்வரன் என்பவருக்கு மீண்டும் வேலை கொடுத்தது திரு.ஆ.முருகேசன் என்பவர். அவர் தற்போது நிலக்கோட்டை பேரூராட்சியில் செயல் அலுவலராக இருக்கிறார். அவர் பணியில் சேர்வதற்கு எந்த வித ஆர்வமும் காட்டவில்லை. அவர் ஆர்வம் காட்டாத காரணத்தால் திரு.ரமேஷ் என்பவருக்கு வேலை வாய்ப்பு மூலம் பெ.செல்வராஜ், செயல் அலுவலர் (தற்போது நெய்காரப்பட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிகிறார்) 01.07.2013 ஆம் நாள் பணி நியமனம் வழங்கப்பட்டது.

திரு.ஆ.மாரிமுத்து என்பவருக்கு 16.08.2013 ஆம் நாள் மேற்படி செயல் அலுவலரால் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. திரு.மணிகண்டன் மற்றும் திரு.ப.ராஜகோபால் என்பவர்களக்கு 08.01.2015–ம் நாள் தற்போது பாலசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ந.பாலசுப்பிரமணியம் அவர்களால் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. தற்போது சின்னாளம்பட்டி செயல் அலுவலர் திரு.பெ.கணேசன் என்பவரால் 02.09.2015 அன்று பொன்மணி என்பவருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் அனைத்து பணி இடங்களுமே மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், திண்டுக்கல் மூலமே பட்டியல் அடிப்படையில் இந்த 5 நபர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். 5 நபர்களுமே பேரூராட்சிகளின் பணி நியமன கமிட்டி தீர்மானங்கள் அடிப்டையில் பணி நியமனம் செய்யப்பட்டனர் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மனுதாரருக்கு ஊதியம் வழங்கப்பட்ட நாட்கள் குறித்த பதிவேடு நகல்கள், வருகை பதிவேடு நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது"

4. இம்முறைமன்ற அழைப்பாணை எண்.0315/2015/பேரூராட்சி நாள்.11.07.2016–ன் படி மனுதாரர் திரு.கோபாலகிருஷ்ணன்ஆஜராகி அளித்த வாக்குமூலம் பின்வருமாறு:–

25.08.2015 நாளிட்ட முறையீட்டு மனு அனுப்பியது நான்தான். ஆயக்குடி பேரூராட்சியில் நான் 21/2 மாதங்கள் துப்பரவு பணியாளராக பணிபுரிந்தேன். நான் பணியின்போது எந்தவித தவறும் செய்யவில்லை. வேறு இருவருக்கு நிரந்தரம் செய்வதற்காக என்னையும், திரு.மகேஸ்வரன் என்பவரையும் வேலை விட்டு நீக்கினார்கள். என்னுடைய இடத்தில் நியமிக்கப்பட்டவர் இளையவர். என்னோடு பணி நீக்கம் செய்யப்பட்ட திரு.மகேஸ்வரன் என்பவர் அவருடைய உறவினர் அதே துறையில் அதிகாரியாக இருந்ததால், நீதிமன்றம் மூலம் ஆணை வாங்கி அவருக்கு பணி வழங்கப்பட்டது. பதிவு மூப்பிலும் மூத்த என்னை நீக்கிவிட்டு இளையவர்களை பணி நியமனம் செய்துள்ளனர்.

எனக்கு அந்த பணியை வழங்க வேண்டும் என்று பல தடைவ சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டு, பின்பு நீதிமன்றத்தின் மூலம் என்னுடைய மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் ஆணை வழங்கியது. எனக்கு அவர்கள் வேலை

வழங்கவில்லை . என்னை பணி நீக்கம் செய்துள்ளனர். என்னை பணிநீக்கம் செய்யும் பொழுது அடுத்த காலியிடம் ஏற்படும் பொழுது எனக்கு முன்னுரிமை தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு பணி வழங்காமல், அதன் பிறகு புதிதாக நான்கு பேரை பணியில் நியமித்துள்ளனர். நான் பணி வேண்டாம் என்று யாரிடமும் கூறவில்லை எனக்கு பணி மீண்டும் கிடைப்பதற்கு வழிவகைசெய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

5. இந்நிலையில் செயல் அலுவலரின் விளக்கஅறிக்கை, விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றை இம்முறைமன்றம் பரிசீலித்ததன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

6. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.MD.எண்.8018/2015–ல் 13.05.2015 நாளிட்ட தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரரின் நேர்வினை கருத்தில் கொண்டு மனுதாரரின் துப்பரவாளர் பணியிடத்திற்கான விண்ணப்பத்தினை ஆய்வு செய்து உரிய ஆணை வழங்கிட இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 27 நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்:

1. திரு.K.கோபாலகிருஷ்ணன்,
எண்.540/C, 13வது வார்டு, நேரு நகர்,
புது ஆயக்குடி, பழனி தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி,
ஆயக்குடி, திண்டுக்கல் மாவட்டம்.

<u>நகல்:</u>

1.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை–108.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநரகம்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்.